**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.192/2025**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.04.2026 | | |
| பெயர்: | வஹிதாபானு<br>(PW1– Chief ) | கணவர் பெயர்: | முகம்மது இம்ரான் |
| கிராமம்: | திருமுல்லைவாசல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 30/2026 |

**<u>முதல் விசாரணை : 18.04.2026</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 03.02.2019 தேதியிட்ட எனக்கும், பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணத்தின் அழைப்பிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. கடந்த 28.02.2019 தேதியிட்ட திருமண பதிவு சான்றிதழின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. கடந்த 02.11.2019 தேதியிட்ட வாதிக்கும், பிரதிவாதிக்கும் பிறந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழ் இணைய வழி நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. கடந்த 05.08.2025 தேதியிட்ட குலா என்கிற மணவிலக்கு உறுதிமொழி ரத்து பத்திரம் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. கடந்த 25.08.2025 தேதியிட்ட குலா ஆவணம் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி ஏற்கனவே தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.